## முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

முன்னிலை:-**திருமதி ஆ.முத்துசாரதா, பி.எல்., பி.ஜி.டி.பி.எம்.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.**

**2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாள் திங்கட்கிழமை**

**இந்திய விவாகரத்து அசல் மனு எண்-67/2024**
( CNR. NO:-TNDG010034482024)

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, பஞ்சம்பட்டி வடக்கு, அமலோற்பவமாதா தெரு, கதவு எண்.5/247 ல் வசிக்கும் கிறிஸ்துவர், வயது சுமார் 34 உள்ள அபிரகாம் ஆரோக்கியசாமி மகளும், அந்தோணி ராஜீவ் குமார் மனைவியுமான வெர்ஜின் சோபிதா .

.. மனுதாரர்

// எதிராக //

1) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, N. பஞ்சம்பட்டி, அண்ணாநகர், கதவு எண்.4/3 ல் வசிக்கும் கிறிஸ்துவர், வயது சுமார் 34 உள்ள அருள் ஜோசப்ராஜ் அவர்களின் மகன் அந்தோணி ராஜீவ்குமார்.

2) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, N. பஞ்சம்பட்டி, சந்தனமாதா தெர என்ற முகவரியில் வசிக்கும், கிறிஸ்துவர், அந்தோணி ராஜீவ்குமார் அவர்களின் மனைவி ரபேக்கால்.

.. எதிர்மனுதாரர்கள்

மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.07.2012 ம் தேதி திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் Sacred Heart Shrine ஆலயத்தில் வைத்து நடைபெற்ற திருமணத்தை ரத்துச் செய்து விவாகரத்து உத்தரவு வழங்கக்கோரி இந்திய விவாகரத்து சட்டப் பிரிவு 10(1)(i)(x)-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் -9.7.2024

இம்மனு கோப்பில் எடுக்கப்பட்ட நாள்-2.8.2024

இம்மனுவிற்கான நீதிமன்ற கட்டணம் ரூ.50/- தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பிட்டுச் சட்டத்தி II-ஆம் அட்டவணையின் சரத்து 11(I)(ii)-இன் கீழ்(Article 11(i)(ii) of Schedule II)-ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்னர் 13.02.2025 தேதியன்று வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. திருவேங்கடம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டும், சாட்சிகளின் சாட்சியங்கள், குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் யாவற்றையும், பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இந்த மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பித்த

**உத்திரவாணை**

1. இம்மனு அனுமதிக்கப்படுகிறது.
2. மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.07.2012ம் தேதி திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் Sacred Heart Shrine ஆலயத்தில் வைத்து நடைபெற்ற திருமணம் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.
3. வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுத்தொகை வழங்கப்படவில்லை.

2025ம் ஆண்டு மார்ச் திங்கள் 3ம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையைப் பதித்து வழங்கப்பட்டது.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.07.15 13:47:19 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
திண்டுக்கல்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
திண்டுக்கல்
IDOP No- **67/2024**
**உத்தரவாணை**
நாள்-3.3.2025